

# MASS
## FOR MAX 50

- Infection control procedures, to be used during services in the Catholic Church from May 7th, 2020 and until further notice.
- A maximum of 50 faithful can attend during each mass and church service – in addition to those who are ministering in the church.

## இறைமக்கள் செய்யவேண்டியவை:



- வழிபாடுகளில் பங்கெடுப்பதற்கு முன்பதிவும் அனுமதியும் பெற்றிருத்தல்வேண்டும். (நாளாந்த வழிபாடுகளுக்கு (திங்கள் - வெள்ளி) முன்பதிவுசெய்வது இலகுவானது)
- நோய் அறிகுறியெதுவும் (சிறிய அறிகுறியேயாயினும்) தென்பட்டால் ஆலயத்திற்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளவும்.
- ஆலயத்திற்குள்ளேயும் வெளியேயும் நபர்களுக்கிடையில் 1 மீற்றர் இடைவெளியைப் பேணவும். (ஒரே வீட்டில் வசிப்பவர்களுக்கிடையில் ஒரு மீற்றர் இடைவெளி கட்டாயமானதல்ல)



- ஆலயத்திற்குள் நுழைவதற்குமுன்னும் நற்கருணை பெறுவதற்குமுன்னும் கைகளைத் தொற்றுநீக்கிகொண்டு சுத்தப்படுத்துதல் அவசியமானது.
- ஆலய உதவிப்பணியாளர்களின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவது அவசியமானது.



- மற்றவர்களுக்கு கைலாகு கொடுப்பதைத் தவிர்த்துக்கொள்ளவும்.
- இருமும்போதோ, தும்மும்போதோ காகிதக் கைக்குட்டைகளையோ முழங்கைகளையோ பயன்படுத்தவும்.
- தொற்றுக்குறித்த பயமிருக்கும்பட்சத்தில் *நற்கருணை பெறுவது கட்டாயமானது* என்று எண்ணத்தேவையில்லை.

# தொற்றைத்தடுக்க ஆலயத்தில் நடைபெறவிருப்பது:







- வழிபாடுகளுக்கிடையில் ஆலயம் சவர்க்காரம் மற்றும் தொற்றுநீக்கிகள்கொண்டு முழுவதுமாகச் சுத்தம் செய்யப்படும்.

- ஆலயத்தில் தொடுகைத்தொற்று சாத்தியமுள்ள அனைத்து இடங்களையும், பொருட்களையும் சுத்தம்செய்ய மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- ஆலய கழிவறைகளைச் சுத்தம்செய்ய கூடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- பாடற்புத்தகங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

## குருக்கள் செய்யவேண்டியவை:



- குருக்கள் வழிபாட்டிற்கு முன்பாகவும், வழிபாட்டு வேளையிலும், வழிபாட்டிற்குப் பின்பாகவும் கைகளைச் சுத்தமாகப்பேணுவர்.

- குருக்கள் நற்கருணைப் பகிர்விற்கு முன்னும் பகிர்வின்போதும் கைச்சுத்தம்பற்றி மேலதிக கவனம் செலுத்துவர்.



- குருக்கள் வழிபாடுகளுக்கிடையில் ஆலயம் சரியானமுறையில் தொற்றுநீக்கப்படுவதை உறுதிசெய்வர்.

- குருக்களுக்கு நோய் அறிகுறியெதுவும் (சிறிய அறிகுறியேயாயினும்) தென்பட்டால் வழிபாடுகளெதையும் நடத்தக்கூடாது.

# ஆலய உதவிப்பணியாளர்கள் செய்யவிருப்பவை:



- முன்பதிவுசெய்திருப்பவர்களை மாத்திரம் ஆலயத்தில் அனுமதிப்பர்.
- குறித்த வழிபாட்டில் (வழிபாட்டுப்பணியாளர்/ பீடப்பணியாளர் தவிர்ந்த) ஐம்பது பேரை மட்டுமே அனுமதிப்பர்.



- ஆலயத்தில் அனைவரும் கைகளுக்கு தொற்றுநீக்கி பயன்படுத்துவதை உறுதிசெய்வர்.
- முழுவழிபாட்டுவேளையிலும் நபர்களுக்கிடையில் ஒரு மீற்றர் இடைவெளி பேணப்படுவதை உறுதிசெய்வர்.



- பாடற்புத்தகங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாதிருப்பதை உறுதிசெய்வர்.










Katolsk grafikk fra Vecteezy
https://www.vecteezy.com/free-vector/catholic
Annet: Pixabay & helsenorge.no